**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.281/2024**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுரேஷ்குமார் | தொழில் | : தனியார் வேலை |
| தகப்பனார் பெயர் | : வேலுச்சாமிரெட்டி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : கேதையுறம்பு | வயது | : சுமார் 44 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 16.10.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**<u>பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :</u>**

என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? நிரந்தர உறுத்துக்கட்டளை வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது தாத்தா சுப்பாரெட்டியார், ராமசாமிரெட்டியார், கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகிய மூவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் ? சரிதான். எனது தாத்தாவுடன் பிறந்த மற்ற இரண்டு சகோதரர்களும், எனது தாத்தாவும் விவசாய குடும்பம் என்றால் ? சரிதான். எனது தாத்தா சுப்பாரெட்டியார், ராமசாமிரெட்டியார், கிருஷ்ணசாமி ரெட்டியார், எனது தகப்பனார் வேலுச்சாமி ஆகியோர்கள் கடந்த 09.10.1992ம் தேதி பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் ? சரிதான். என்னிடம் காட்டப்படும் கடந்த 09.10.1992 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் தான் ராமசாமிரெட்டியார், சுப்பாரெட்டியார், கிருஷ்ணசாமிரெட்டியார், எனது தகப்பனார் வேலுச்சாமி ரெட்டியார் ஆகியோர்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் ? சரிதான். **<u>மேற்படி 09.10.1992 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.1.</u>** மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் தன்மை படி ராமசாமிரெட்டியாருக்கு A பாக சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் ? சரிதான்.

B பாக சொத்துக்கள் எனது தகப்பனார் வேலுச்சாமிரெட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ? சரிதான். A பாக சொத்தில் தான் சர்வே எண்.116 என்ற புலத்தில் 14 ஏக்கர் 97 செண்டில் பொதுவில் பாதி ஏக்கர் 7 செண்ட் 48 1/2 நிலம் A பாகமாக பிரதிவாதியின் தகப்பனார் ராமசாமி ரெட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ? சரிதான். சர்வே எண்.116 அல்லாமல் மற்ற சர்வே எண்களில் உள்ள நிலமும் ராமசாமிரெட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ? சரிதான். B பாகத்தில் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ? எனது தாத்தா சுப்பாரெட்டியார் மற்றும் எனது தகப்பனார் வேலுச்சாமி ரெட்டியாருக்கு கூட்டாக ஒதுக்கப்பட்டது. மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் அடியிற்கண்ட சொத்துக்கள் நமக்கு பூர்விக வழியில் பாத்தியப்பட்டதும், பூர்விக சொத்துக்களின் வருமானங்களை வைத்து குடும்ப தலைவர் என்ற முறையில் நம்மில் 1வது நபர் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து தான் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ளது என்றால் ? ஆமாம். கடந்த 22.09.1971–ம் தேதி எனது தகப்பனார் வேலுச்சாமிரெட்டியார் கிரையம் பெற்ற கிரைய ஆவணமான வா.சா.ஆ–1 ஆவணத்தின் தன்மை படி தான் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். 22.09.1971–ம் தேதியில் எனது தகப்பனார் வேலுச்சாமி ரெட்டியார் கிரையம் பெற்ற சொத்துக்களும், பிரதிவாதியின் தகப்பனார் ராமசாமிரெட்டியார் கிரையம் பெற்ற சொத்துக்களும், பொதுக்குடும்ப சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானத்தில் இருந்து பெறப்பட்ட கிரைய ஆவணங்கள் என்றால் ? இல்லை. எனது தகப்பனார் சுயசம்பாத்தியத்தில் வாங்கிய சொத்து ஆகும். கடந்த 22.09.1971–ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றால்? இல்லை. எனது தகப்பனாரும், மற்ற குடும்ப உறுப்பினர்களும் கடந்த 09.10.1992–ம் தேதிக்கு முன்பு வரை பொதுக்குடும்பமாக இருந்து ஒன்றாக சம்பாதித்து வந்த வருமானத்தில் தான் 09.10.1992–ம் ஆண்டுக்கு முன்பு

பாகப்பிரிவினையில் கண்டுள்ள சில சொத்துக்கள் கிரையம் பெற்றும், மற்ற சொத்துக்கள் பூர்விக வழியில் வந்ததையும் சேர்த்து தான் ஒன்றாக அனுபவித்து வரப்பட்டது என்றால் ? சரியல்ல. பொதுக்குடும்ப சொத்து என்பதால் தான் கடந்த 09.10.1992 தேதியில் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் சுப்பாரெட்டியாரும், எனது தகப்பனாரும் கிரையம் பெற்ற சொத்தான சர்வே எண்.116/1 என்ற புலத்தினை பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு A அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது தகப்பனார் கிரையம் பெற்று வாங்கிய சொத்து எதையும் பாகப்பிரிவினையில் காட்டவில்லை. தாவா சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்களையும் அதே தேதியில் எனது தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார். அந்த சொத்தையும் பாகப்பிரிவினையில் காட்டவில்லை. எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தினை பொதுக்குடும்ப சொத்து என்பதால் தான் தாவா சொத்தினை பிரதிவாதிகளுக்கு 09.10.1992ம் தேதியிட்ட பாகப்பிரிவினையில் பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட காரணத்தினால் தான் எனது தகப்பனாருக்கு அந்த சொத்தினை ஒதுக்கவில்லை என்றால் ? உண்மையல்ல. கடந்த 22.09.1971ம் தேதியில் எனது தகப்பனார் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் தன்மை படி தான் கடந்த 24.06.2024ம் தேதி சொத்தினை எனக்கு செட்டில்மெண்ட் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது என்றால் ? சரிதான். 22.09.1971ம் தேதியிட்ட தாவா சொத்தினை ஏற்கனவே 09.10.1992 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளதால் கடந்த 24.06.2024ம் தேதி ஏற்படுத்திக் கொண்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. கடந்த 22.09.1971–ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் வழியாக பெறப்பட்ட சொத்துக்கள் பிரதிவாதிகளின் பெயரையும் உள்ளடக்கி கூட்டு பட்டா எண்.957 கூட்டு பட்டாவாகத்தான் இருந்தது என்றால் ? ஆமாம். செட்டில்மெண்ட் ஆவணம் எனது பெயருக்கு ஏற்பட்ட பிறகு தான் தனிப்பட்டா ஏற்படுத்தப்பட்டது என்றால் ? சரிதான்.

பிரதிவாதிகளுக்கு எந்தவித அறிவிப்பும் கொடுக்காமல் நான் தவறான தகவலை கொடுத்து வருவாய்துறையில் எனது பெயருக்கு தனிப்பட்டா ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் ? சரியல்ல. எனது தகப்பனார் கடந்த 24.06.2024ம் தேதி எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணமும், செட்டில்மெண்ட் ஆவணத்தின் தன்மை படி வருவாய்துறையில் பெயர் மாற்றம் ஏற்படுத்திய பட்டாவும் செல்லத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. தாவா வழக்கு சர்வே எண்ணான 116/1–ல் மொத்த விஸ்தீரணம் 14 ஏக்கர் 97 செண்ட்டில் பொதுவில் பாதி 7 ஏக்கர் 48 1/2 செண்ட் தான் பொதுக்குடும்ப சொத்து என்றாலும், அந்த சொத்தினை பாகப்பிரிவினை பத்திரத்தில் A பாகஸ்தருக்கு ஒதுக்கப்பட்டுவிட்டால், எனக்கு தாவா சொத்தை பொறுத்து எந்தவித அனுபவமும், சுவாதீனமும் இல்லை என்றால் ? சரியல்ல. தாவா சொத்துக்களை நாளதுவரை பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் ,? சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நான் கேட்டுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. சர்வே எண்.116/1ல் ஏக்கர் 7, செண்ட் 48 1/2 விஸ்தீரணம் உள்ள பூமியை பொறுத்து இந்த பிரதிவாதி பழனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.471/2024ல் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ? சரிதான். அந்த வழக்கை எதிர்கொண்டு நடத்தி வருகிறேன் என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் ? சரியல்ல. நான் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு எவ்வித வழக்குமூலமும் இல்லை என்றால் ? சரியல்ல. நான் தான் தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்து வருகிறேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.10.16 17:32:47 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்